# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

**අති විශෙෂ**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2446/45 - 2025 ජූලි මස 24 වැනි බ්‍රහස්පතින්දා - 2025.07.24

2446/45 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: DSNI/LAN/10/கைய/51.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/8/2020/CEB/05.

ஒரு பொதுத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணத்தின் காலி மாவட்டத்தில் நியாகம பிரதேச செயலகப் பிரிவில் மத்தக எனும் ஊரில் அ.க.பி. 580 ஆம் இலக்கமுடைய வயற்காணியின் கடஸ்திரல் வரைபட இலக்கம் 810697 உடைய வலய இலக்கம் 01, ஆவண இலக்கம் 01 இல் காட்டப்படும் காணித்துண்டின் விபரங்கள் பின்வருமாறு:

**1. துண்டு இல. 01**

காணியின் பெயர்: மத்தகவெல்யாய அல்லது ஹாதவில கும்புர; விபரம்: - ; தற்போது உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: மார்த்துபிடிய ஏபாகே குலரத்ன ஏபா, உடகெதரவத்த, மத்தக மற்றும் ஏனையோர்; விஸ்தீரணம்: 21.7 பேர்ச்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு நியாகம பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 11 ஆந் திகதிக்கு முன்னர்



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஜீ. பீ. ஏ. திலினி,
பிரதேச செயலாளர் ,
நியாகம.

பிரதேச செயலகம்,
நியாகம,
2025, யூலை 18.

EOG 07 - 0297

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது தொடர்பு இல.: WAN/LND/05/AQUIS/01-L4.
காணி அமைச்சின் தொடர்பு இல.: 4/3/16/2019/UDA/179.

2025.03.24 ஆந் திகதிய 2429/04 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப் பட்ட காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பில் உள்ள இழப்பீட்டுப் பரிசோதனை திகதியான 2025.05.05 ஆனது 2025.10.27 ஆகவும், உரிமை கோரல்களைச் சமர்ப்பிப்பதற்காக வழங்கப்பட்ட திகதியான 2025.04.28 ஆனது 2025.10.17 ஆகவும் எடுத்து கொள்வதற்கு எதிர்ப்பார்க்கின்ற காணித் துண்டுகளான துண்டு இலக்கம் 1 மற்றும் 4 உள்ளடங்கிய அட்டவணை கீழே குறிப்பிடப் பட்டவாறும் திருத்தப்பட வேண்டும் என இதன் மூலம் அறிவிக்கிறேன். மேலும், சேர்க்கப்பட்ட புதிய காணித் துண்டுகளுக்கான இழப்பீட்டுப் பரிசோதனை திகதி மற்றும் உரிமை கோரல்களைச் சமர்ப்பிப்பதற்காக வழங்கப்பட்ட திகதி ஆகியவை மேலே குறிப்பிடப்பட்ட திகதிகளாகவே இருக்கும்.

**அட்டவணை**

வடமேல் மாகாணத்தின் புத்தளம் மாவட்டத்தின் வண்ணாத்திவில்லு பிரதேச செயலகப் பிரிவின் 635/3 ஆம் இலக்க சேரக்குளி கிராம அலுவலர் பிரிவின் சேரக்குளி கிராமத்தில் அமைந்துள்ள புத்தளம் மாவட்ட நில அளவையாளர் நாயகத்தினால் 2024.12.30 ஆந் தினத்தன்று தயாரிக்கப்பட்டுள்ள 410058 கடஸ்திரல் வரைபடத்தில் வலய இலக்கம் 1, தாள் இலக்கம் 1 இல் கீழுள்ள எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணித் துண்டுகள்:

**துண்டு இலக்கம் - 1 (களப்புக்கு ஒதுக்கிய இடம்); விஸ்தீரணம்: 1.1329 ஹெக்டயார்**
வடக்கு : - ; கிழக்கு : - ; தெற்கு : - ; மேற்கு : - ;

**துண்டு இலக்கம் - 4 (பாதை); விஸ்தீரணம்: 0.2702 ஹெக்டயார்**
வடக்கு : துண்டு இலக்கம் 3; கிழக்கு : துண்டு இலக்கம் 3 மற்றும் 6; தெற்கு : துண்டு இலக்கம் 3; மேற்கு : துண்டு இலக்கம் 3;

எஸ். எம். பீ. நந்தசேன,
பிரதேச செயலாளர்,
வண்ணாத்திவில்லு.

பிரதேச செயலகம்,
வண்ணாத்திவில்லு,
2025, யூலை 19.

EOG 07 - 0298

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.